உ

சிவமயம்



# அமரர். திருமதி இராசேந்திரம் சொர்ணநாயகி

# அவர்களின்

# 31ம் நாள் நினைவு மலர்

# 12.01.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவு மலர்

மண்ணுலகு

1945

08

22



விண்ணுலகு

2022

12

13

## அமரர். திருமதி. இராசேந்திரம் சொர்ணநாயகி அவர்கள்

### திதி வெண்பா

சுப கிருது வருடம் கார்த்திகை மாதம் இருபத்து
ஏழாம் நாளாம் செவ்வாய் தேய்பிறை ஷஷ்டி
திதி தன்னில் இராசேந்திரம் சொர்ணநாயகி
தான் வாழ்ந்து வந்த பூவுலகை மறந்து
வானுலகு தானடைந்தார் சிவன் தாள் தனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப உறவுகளுடனான நினைவலைகள்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப உறவுகளுடனான நினைவலைகள்















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் அன்புத் தெய்வத்திற்கு
# சமர்ப்பணம்

கண்ணை இமை காப்பதுபோல்
எம்மைக் காத்து வளர்வித்து உயர்வித்து,
பாசம் காட்டி
ஆளாக்கி எல்லோரையும் ஒரு நிலைப்படுத்தி
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டுப்போன
ஈடிணையற்ற எம் பாசதீபமாம் எங்கள்
குலதெய்வத்தின் பாதக்கமலங்களிற்கு
இம் மலரை காணிக்கையாக
சமர்ப்பிக்கின்றோம்

கணவன்,மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம் ;

## பஞ்சபுராணம்

திருசிற்றம்பலம்



### விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும்
நாதனுமாந்தன்மையினால் கண்ணிற் பணியிற் கனிந்து

### தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலார்
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலின ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கனெப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பக கனியை
கரையிலா கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னை கண்டு கண்டு உள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லை
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச் சக்கரம்

கல்விச் சிறப்பும் கலைச்சிறப்பும் மிகுந்த
ஆலங்கேணி என்னும் அழகுடன்
கிராமத்தின், இராசலிங்கம்
சௌந்தர நாயகிக்கு இளைய
செல்வப்புதல்வியாக சொர்ணநாயகி
ஆயிரத்து தொழாயிரத்து
நாற்பத்தைந்தாம் ஆண்டு
ஆவணி மாதம் இருபத்து இரண்டாம்
திகதி வந்துதித்தார்

சொர்ணம் என்ற
பெயருக்கமைய அழகும், அறிவும்
குறும்பும் சுறுசுறுப்புமாக, சொந்தங்களோடு
சுற்றி விளையாடி வளர்ந்து வருகையில்

பெற்றோரின் தொழில் நிமித்தம்
முள்ளிப்பொத்தானை எனும் கிராமத்துக்கு
இடம்பெயர்ந்து, அங்கு அனைவரின்
மனம் கவர்ந்த அழகியாக
அவர் தமக்கை லெச்சுமிப்பிள்ளையுடன்
சுற்றிவலம் வருகையில்

மாரியம்மன் அருள்பாலிக்கும் மாங்கணாய்
எனும் கிராமத்தின்–பூசாரி
குடும்பத்தினரான
பொன்னம்பலம்–மாணிக்கம்
தம்பதியாரின் இரண்டாவது மகனான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசேந்திரம் அவர்களை விரும்பி
திருமணம் எனும் பந்தத்தில் இணைந்தார்.
கோயில் தொண்டோடு விவசாயம்-என
செழிப்பாக இருந்த இவர்வாழ்வில்
கஜேந்திரன்,மகேஸ்வரன்,நகலேஸ்வரன்
எனும் புதல்வர்களையும் சத்தியப்பிரியா
எனும் ஒரே ஒரு ஆசைப்புதல்வியினையும்
கடைக்குட்டியாக ஜெகதீஸ்வரனையும்
பெற்றெடுத்தார்.

பாராட்டி சீராட்டி பண்புடன் வாழப் பழக்கி
பிள்ளைகளை கண்டிக்கவும் இல்லை,
தண்டிக்கவும் இல்லை-தம்
பிள்ளைகளுக்கு கல்வி கற்பித்து,

பட்டம் பெறவைத்து
பதவிகளைப் பெறவைத்து மனம் மகிழ்ந்தார்.
காலத்தின் கெடுபிடியால்
விவசாயம் கைகொடுக்காமல் போக
தனக்கு தெரிந்த கைத்தொழிலான
மாவிடித்து இடியப்பம் அவித்து
ஊர்மக்களின் பசிபோக்கியதோடு
தம்மக்களின் தேவைகளையும்
நிறைவேற்றி வந்ததோடு
எவரது உதவியும் இன்றி
தன்னம்பிக்கையுடனும் உறுதியுடனும்
அவரது ஓயா உழைப்பாலும்
சாம்பல்தீவு கிராமத்தில் அவருக்கென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பையும், நற்பெயரையும் பெற்றார்.
இவ்வாறு இவரது வாழ்க்கைச் சக்கரதில
மருமக்களாக பூங்கிளி, ராஜேஸ்வரி, சந்திரகுமார்,
மற்றும் விஜயதர்ஷிகாவையும்
சேர்த்துக் கொண்டார்.

பரந்த எண்ணம் கொண்ட
பெருந்தகையால் மருமக்களையும்
நம்மக்கள் போன்று பாரபட்சம்
காட்டாமல் பாசமாய் நேசமாய்
பராமரித்து வந்தார்.

பிறர் பிள்ளைகளையே ஆசையோடும்
பாசத்தோடும் பார்க்கும் இவருக்கு
பேரப்பிள்ளைகளாக லக்சிகா,தினுயன்,
டிலுஷியா,விதுசனா,வினுசிதா,துஷாஹினி,
மகதேஷ், மஹிஷாஹினியும், எய்டன் விவான்,
லியாம் கார்திக்கும் வந்துசேர்ந்தனர்.

ஆலமரமாய் அனைவருக்கும் குடையாய்
பரந்து விரிந்து கிடந்து இவர் விழுதுகளாக
விக்னேஸ்வரன்,கிருஷாந்தன்,வினுஷன்,
நிரோஜன் பேரப்பிள்ளைகளாக வந்து
சேர்ந்ததோடு பூட்டன் என்ற இடத்தினால்
விதேஷ் குட்டியும் பூர்த்தி செய்து கொண்டான்

கடைகுட்டி மகனான ஜெகதீஸ்வரன்
தான் பார்க்கவேண்டிய தலங்கள் இந்தியா,
இலங்கை என அனைத்தையும் தரிசித்து
வந்தார் வெளிநாடு சென்று அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன், மருமகள் மற்றும் பெறா மக்கள்
பேரப்பிள்ளைகளுடன் உறவாடி
கழித்து வந்தார்

இவ்வாறாக சுற்றி கொண்டிருந்த இவருக்கு
காலத்தில் கட்டளையால் உடல் உபாதை
ஏற்பட தம்பிள்ளைகளை நினைத்தே
கண் கலங்கினார். அதை அறிந்து
கடைக்குட்டி மகனும் வந்து சேர்ந்தார்து,
அவரை அணைத்து, அன்னமூட்டி
அழகும் பார்த்தார் இவ்வாறு இருக்கயில்
அவர் தம் உறவுகளை விட்டு
செல்லும் காலம் வந்து சேர தனது
மகனின் மடியில் தலைவைத்த வண்ணம்
இவ்வுலகையும் எம்மையும்
விட்டுச் சென்றார்
அன்னாரின் ஆத்மாசாந்திக்காக
பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவர் புலம்பல்

வழித்துணையாக நீ இருக்க
வருத்தம் இல்லாமல் நான் இருந்தேன்
பாசம் காட்ட நீ இருக்க
பாதகம் இல்லாமல் நான் இருந்தேன்

உறுதுணையாக நீ இருக்க
உபத்திரமும் இல்லாமல் நான் இருந்தேன்
உலகமே நீதான் என்று
உன்னை மட்டுமே சுற்றி வந்தேன்

காதல் கொண்ட போதும் கண்ணே
என் கால் உடைந்த போதும்
உன் கண்ணீரை நான் கண்டதில்லை
என் கவலையிலும் சிறு சந்தோஷம் தந்தாய்

என்னவளே நீயற்ற நான்
நீரற்ற நான் நிலையற்று சாய்கின்றேன்
நீ வருகின்றாய் என எண்ணி
வாசல் பார்க்கின்றேன்.

உன் சேலை மடிப்பில் எத்தனை முடிச்சு
உன் பணமுடிச்சு அவிழ்த்து நான் மகிழ்ந்தேன்
உன் வீட்டில் பணமில்லை
உன் பணமெல்லாம்
உன் சேலை மடிப்பில்

பாசக்கணவன் தவிக்கின்றேன் அம்மா
பார்த்துப் பார்த்து அழுகின்றேன் அம்மா
பாவியாகி நிற்கின்றேன் அம்மா
பாதியிலே விட்டதென்ன என் சொர்ணம்மா

கணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே சென்றாய் அம்மா அம்மா.........

அம்மா என்ற உறவு அற்புதமானது
அன்புடன் தான் வளர்த்து
அறிவையும் பண்பையும் நிறைத்து
வளமான வாழ்க்கையை
வளமாக உளமார வாழ்ந்திட
வாழ வைத்த அன்புத் தெய்வமே
எம்மிடம் இருந்து விடைபெற்று
விண்ணுலகம் சென்றீரே
அமைதியின் உருவமாய்
அடக்கதின் இருப்பிடமாய்
பண்பின் பெருந்தகையாய்
பாசத்தின் உறைவிடமாய்
எம்மோடு அன்பு ஒளியாகவிருந்த உத்தமியே
உங்கள் பூவுடல் மட்டும் தான் மறைந்து விட்டதம்மா
உங்கள் நினைவுகள் எங்கள் மனதில்
எப்போதும் மறையாதம்மா

புன்னகை பூத்த முகமம்மா
சில்லறை சிந்தும் சிரிப்பொலி அம்மா
நெஞ்சார நேசித்த என் தாயே
எமை விட்டு வெகுதூரம் போனாயோ

பிள்ளைகள் மனம் வெடிக்குதம்மா
பூக்காதோ மீண்டும் உந்தன் வாழ்வு அம்மா
காண்போமா மீண்டும் உன் முகம் அம்மா

வேண்டுதலாய் கேட்கின்றோம்
மீண்டும் எம் உறவில் பிள்ளையாய்
வந்து பிறந்திடுக
பெருமையாய் காத்திருப்போம்
தூண்டாமணி விளக்கே அம்மா

கண்ணீரில் வாடும் பிள்ளைகள்
மகேஸ்வரன், நகுலேஸ்வரன், ஜெகதீஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் புலம்பல்

# ஓயாத கடல் அலைகள் உன் அன்பு

அம்மா, எனும் மூன்றெழுத்து
கவிதை இல்லை – அம்மா
எனக்கு நீங்கள் வாழ்க்கை – நான்
உங்களை அம்மா என்று அழைப்பேன்
நீங்களும் என்னை அம்மா
என்றுதான் அழைப்பீர்கள்.

என்னை விட்டு நீங்களும் – நல்
உணவு உண்டதில்லை – நல்
ஆடை அணிந்ததில்லை – நல்
உறக்கம் கொண்டதில்லை
நான் அதைக் கண்டதும் இல்லை

பிள்ளைகள் வாழ்வே – உங்களின் வாழ்வென்று
கஷ்டங்கள் பல பட்டு கழனமாய் உழைத்து
இவ்வுலகில் எமக்கென – ஒரு
முகவரியினை உங்கள் இழயப்பம் பெட்டிதான்
எமக்கு பெற்றுத்தந்தது அம்மா – எமக்கெல்லாம்
பசியும் தெரியாதம்மா – உங்கள் முகத்தில்
பதட்டமும் தெரியாதம்மா – புன்னகை
மட்டுமே நாம் கண்டோம்

இல்லை என்று சொன்னதில்லையம்மா
பார்ப்போம் என்றுதான் சொல்வீர்கள்

தண்ணீர் என்று வருபவர்களுக்கு
தேனீர் தருவீர்கள் – நீங்கள்
பயபக்தியோடு எம்மை – பண்பாக
வளர்த்தீர்கள் – நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட கஷ்டங்களை – உங்களை
முகம் சொல்லாவிட்டாலும்
மரத்துப்போன உங்கள் கைகளும்
தேய்ந்து போன உங்கள் பாதங்களும்
சொல்லுமம்மா – எமக்கு

எமக்கு அன்னை மட்டுமில்லை –அம்மா
நீங்கள் என் குல தெய்வம்
என் ஆயுள் இருக்கும் வரை – நான்
மறக்க முடியாது உங்களை

அம்மா ! என்று சும்மா சொன்னாலே – என்ன
என்று ஓடிவந்து வாசலிலில் நிற்பீர்கள் – இன்று
இரவு பகலாக நினைக்கின்றோம்
கதறி அழைக்கின்றோம் – ஏனம்மா
வரவில்லை
எமக்காக நீங்கள் உழைத்தது போதும் – என்று
இறைவன் உங்களை ஓய்வெடுக்க அழைத்தாரோ
நிம்மதியாய் தூங்குங்கள் என் தாயே....

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

அன்புடன் மகள் சந்திரகுமார்
சத்திய பிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றவளே உங்களுக்காக

பெற்றெடுத்து பேணியாதுகாத்து – எனக்கு
பலகலைகளோடு பட்டமும் பெற வைத்து

ஊர் போற்ற பார் போற்ற – என்னை
உத்தமனாய் வளர்த்தெடுத்து
கஸ்ரங்கள் பல பட்டு – என்
கனவுகளை நினைவாக்கி

எனக்கு நோய் வந்த போதெல்லாம்
நோன்பிருந்து என்னைக்காத்து
சீரோடும் சிறப்போடும் – நான் வாழ
சிறந்த துணையும் தேடித்தந்தீர்

நீங்கள் பட்ட கஸ்ரங்கள் – தீரவென்றே
நாடுவிட்டு ஊரைவிட்டு உறவைவிட்டு
உங்களையும் விட்டு நான் – இங்குவந்தேன்

கனவு பல கண்டேன் அம்மா !

கண்மணிபோல் என்னை – காத்த
என் தாய்க்கு எத்தனையோ – நான்
செய்ய வேண்டும் என்றும் – எண்ணி இருக்கையில்

அத்தனையும் பொய்யாக்கி
அவசரமாகி சென்றுவிட்டீர்களே !

கண்மூடி திறக்கும் முன்னரே
கலைந்ததம்மா என் கனவு
மீண்டும் நீங்கள் எங்களிடம் – காலனை
மீண்டுவர மாட்டீரோ என்று
கலங்கி நிற்கின்றேன் அம்மா

உங்கள் கடைகுட்டி பிள்ளை

இ.ஜெகதீஸ்வரன் (நெதர்லாந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமிகு மச்சாள் பறந்து சென்றாயே

அண்ணனை மணமுடித்து
அண்ணியாக வந்தீர்களே – நான்
அண்ணி என்று ஒரு போதுபோதும்
ஆசையாக கூப்பிடதில்லையே.

மச்சாள் என்றும் சொல்லவில்லை
மறுவீட்டில் நான் வாழ்ந்ததில்லை
மாங்கணாயில் வழ்ந்திருந்தோர் இருவரும்
மாற்றுக்கதை கூட கதைத்ததில்லை.

எங்கு சென்றாலும் நான்
உங்கள் பின் தான் வருவேன் முன் சென்றதில்லை
அம்மா என்று கூட நான் கூப்பிட்டதில்லை
அமைதியாக உங்களை நான் தொடர்ந்தேன்.

சண்டை கூட போட்டதில்லை
சரித்திரம் சொல்லும் எங்கள் உறவை
அருகருகே இருந்தும் வாழ்ந்தோம்
அன்பினால் இணைந்தோம் .

உங்கள் தம்பியை மணமுடித்தேன் – நான்
உறவினில் எந்த மாற்றமும் வந்ததில்லை
என் கணவன் அக்காச்சி என்றழைத்ததனால்
என் உறவை நான் மறந்து அக்காச்சி என நானழைத்தேன்.

பிள்ளைபோல் பார்த்து பாசம் காட்டினீர்கள்
பிரிவோம் என்று ஒருபோதும் நினைக்கவில்லை
குளிப்பதற்கு தண்ணீரும் அள்ளித் தந்தீர்கள்
செல்லும் இடமெல்லாம் கூட்டியும் சென்றீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிக்கிழமை என்றால் வேகமாய் வந்திவேன்
தேனீர் கோப்பையுடன் என்னை தேடிக் கொண்டு இருப்பீர்கள்
—என்று
தனிமையிலே அழுகின்றேன் தம்பியோடு சேர்ந்தீரோ
மீண்டும் வருவீர்கள் என வாசல் பார்த்து வாடி அழுகின்றேன்

கோடிப் பக்கம் மெல்லாம் பார்க்கின்றேன்
கோயிலுக்கோ சென்றீர்கள்
மீண்டும் வருவீர்கள் என்று நான்
மீளாத்துயரில் வாழ்கின்றேன்.

ஓம் சாந்தி ! சாந்தி !சாந்தி!

பாசத்தின் வழியே
அன்பு மைத்துனி
துரைநாயகம் இராஜேஸ்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மருமக்கள் புலம்பல்
## விடிவெள்ளி

நிஜ வாழ்க்கையில் நிரந்தரங்கள் பற்றி
பாசத்துடன்,பரிவாக எம் நெஞ்சில்,
அன்பான வார்த்தைகளால்,
பதிய வைத்து கண் இமைக்கும்
நேரத்தில் விழவெள்ளியானது என்னவோ மாமி...!

பிள்ளைகள் போல் எம்மிலும்
ஈடான பாசம் வைத்து,
உணவளித்து, உடை அளித்து
அன்பையும் அளித்து மகிழ்ந்தீர்கள் !
பேரப்பிள்ளைகள் மேல் உயிரிலும் மேலான
அன்பு கொண்டீர்கள்...!

உங்கள் மருமக்கள் ஆனது
தவமான கொடை எமக்கு !
உங்கள் அறிவுரைகள் எம் நெஞ்சில்
கற்களில் பொறித்த எழுத்துக்கள் – போல்
என்றுமே அழியாதவை – மாமி

மருமக்கள்
பூங்கிளி, இராஜேஸ்வரி,
விஜயதர்ஷிகா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகனின் புலம்பல்

அமைதியான உருவமாகவும்
அடக்கத்தின் இருப்பிடமாகவும்
பண்பின் பெருந்தகையாகவும்
பாசத்தின் உறைவிடமாகவும்

பூத்த உந்தன் பூவொன்று தவிக்குதம்மா
பூவுலகத்தோர் மனம் வெடிக்குதம்மா
பூக்காதோ மீண்டும் உங்கள் வாழ்வு
புலம்பி நாங்கள் அழுகின்றோம்

உறவில் உங்களுக்கு மருமகனானேன்
உங்களுக்கு நான் ஒரு மகன் ஆனேன்
உங்கள் முகத்தில் பாசத்தை பார்த்தேன்
கோவத்தை பார்க்கவில்லை மாமி

வாழ வைத்த அன்பு தெய்வமே – மாமி
இவ்வுலகத்தில் இருந்து விடை பெற்று நீங்கள்
விண்ணுலகம் விரைந்தீர்களோ
விரைந்த உங்கள் ஆத்மா அமைதியாக

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் என்னாலும்
கண்விட்டு மறையாமல் இருப்பீர்கள்
அமைதியாக துயிலும் தங்கள் ஆன்மா
இறைபாதம் சேர பிரார்த்திக்கின்றேன்.

மருமகன்
ச.சந்திரகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள்

சாம்பல்தீவை சரித்திரம் படைத்தீர்கள்
சந்தேஷமாக மாரியம்மனிற்கு மாலை போட்டீர்கள்
மண் மலரும் முன்னங்கே
மனம் மலர்ந்து பூரிப்பீர்கள்
பேரப்பிள்ளைகளை பேரன்பு காட்டி நிதம்
ஊர் போற்றபார் போற்ற உண்மை அன்பு காட்டி
பசப்பிணைப்புத் தந்த பண்பு வித்தகியே
புன்னகையை தன்நகையாய் பூண்டீர்களே

குறும்புகளை நாம் புரிகையிலே
அரும்புகளாய் அணைத்து அன்பு காட்டினீரே
அரவணைத்து கொண்டாடினீரே என் அருமை அப்பம்மாவே

தன் பிள்ளைகளுக்கு மட்டுமன்றி
தன் பேரப்பிள்ளைகளுக்கும் கல்வி ஊட்டி ஆழாக்க
தன்னாலான உதவிகளை எல்லாம்
தன்னம்பிக்கையோடு செய்தீர்களே

ஆலயத்தின் பணி பூண்டு புண்ணியணங்கள் தேடினீர்கள்
கண்ணியமாய் வாழ்திங்கு கடமைகளை செய்தீர்களே
விண்ணகத்தை தன்னகமாய் விரும்பித்தான் சென்றீரே
ஆண்டவனை வேண்டுகின்றோம் சொர்க்கம்
அதில் நீருறைய
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

என்றும் உங்கள் அன்புப் பேரப்பிள்ளைகள்
மலுக்ஷியா, விதுசனா, வினுசிதா,
லக்ஷிகா, தினுஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்
## வானத்து நட்சத்திரம்

அம்மம்மா.......
கோடிக்கு நிகர் இல்லை உன் அன்பு
என் கண்கள் உன் முகம் தேடுதே... !
என் இதயம் உன் அன்பைத் தேடுதே ... !
எங்கே சென்றீர்கள் அம்மம்மா ... ?
எங்கள்தூக்கம் எங்கள் மடிதேடும் வேளை
கட்டி அணைத்துத் தரும் உங்கள் முத்தங்கள் எங்கே ?
புரியாமல் நிற்கின்றோம் !
மாற்றங்கள் ஏன் ?
புரியாத வயதெமக்கு
உங்கள் அன்பு மட்டும் புரிந்த வயது
எங்கள் வளர்ச்சியை நீங்கள் பார்க்க
விரும்பினீர்கள் அம்மம்மா ... !
வானத்து நட்சத்திரமாக நாங்கள் உங்களைப்
பார்க்க,நீங்கள் எங்களைப் பார்த்து
சிரித்து மகிழ்வீர்கள் என்ற நம்பிக்கை
எமக்கு உண்டு அம்மம்மா ... !

அன்புப் பேரப்பிள்ளைகள்
துஷாஹினி,மஹதேஷ்,மகிஷாஹினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளை
## ஓயாத கடல் அலைகள் உள் அன்பு

தத்தி தவழும் சிறு மழலைகள் நாம்
அப்பம்மா என்றழைக்க நீங்கள் அருகில் இருக்கவில்லை
எங்கள் அப்பாவை பெற்றெடுத்த
உங்களை பார்க்க நாம் வருவோம்
நீங்கள் ஓடி வந்து எங்களை
அணைத்து முத்தமிடுவீர்கள் என்று
நாம் காத்திருக்கம் வேளைதனில்
எங்கு சென்றீர்கள் அப்பம்மா
ஓடி வாருங்கள் பல முத்தம் தாருங்கள்

எதிர்பார்ப்புடன் நவிலும் பூட்டன் :
எய்டன் விவான்,லியம் கார்த்திக்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டனின் புலம்பல்

## தேடுகிறேன்

பொய்யாக்கி போனீர்களே
என் அம்மா சொல்வார்
எந்தன் பூட்டியம்மா
என்னைக் கண்டால்
இன்பத்தில் திழைப்பாராம்
பாசத்தோடு என்னை
தொட்டுக் குளிப்பாட்டி
பாலூட்டி பல கதைகள்
சொல்வாள் என்று
அத்தனையும் பொய்யாக்கி
அம்மாளாச்சியிடம் சென்று விட்டீர்கள்
என்று, இன்று கூறுகின்றார்
பூட்டியம்மா என்னை பார்க்கவரமாட்டீர்களா ?

பூட்டன் விதேஸ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமருவு கோணமலை தன்னிலோர் பாலிற்
செப்புசாம்பல்தீவிலுற்றிடும் தெய்வம்
பெருமை பெறு மாங்கணாய் என்னு நற்பதியில்
புகழோடு வீற்றிருந்தகில மதிலுள்ள
அருமருவு மடியவர்கள் குலமது தளர்க்க
அருள் முத்துமாரி மேற் காவியம் பாட
கருமருவு யானை முகமுடைய என்னையன்
கழலிணைகளன் போடுதுதி செய்குவாமே

ஓராறு கோணமதிலுற்றவழும் நீயே
உண்மையுள சக்தியாய் நின்றவளும்
தீராத வினைகளை தீர்ப்பவளும் நீயே
திக்கெல்லாம் வலமாக வந்தவளும் நீயே
பாரதி பூதமாய் நின்றவழும் நீயே
பச்சைமால் தங்கையாய் வந்தவளும் நீயே
நேரான மாங்கணாய் தனில் வீற்றிருக்கும்
நிமலையே முத்துமகமாரி யென் தாயே

அவவழுவ்வு மவ்வுமான ஓங்காரி
ஆனந்த நடத்தில் வல்ல சிங்காலி
சவ்வுமையுங் கிலியுமான கெம்பிரி
சகல கலை வல்லவர்கள் போற்று றிங்காரி
கௌவுமென் பனிதுடியிற்கட்டு மாங்காரி
காத்தவராயனைத் தந்த மகாமாரி
ஒவ்வு மொவ்வுமென்று மாங்கணாய் தன்னில்
உற்றுவாழ் முத்துமாரி யென்தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணை மழை பொழியுமிரு கண்களுடையவளே
கையில் கபாலமதையேந்தி நிற்பவளே
பெருமை கொழுக்கு கட்கம் பாசமிவைகள்
பிரியமாய் கைகளில் தாங்கியே வந்து
உருமையுள சிங்க வாகனம் தனிலேயேறி
உலகுமோர் பிணிதனை நீக்கியேயருள
அருமையுள மாங்கணாய் தனில் வீற்றிருக்கும்
அன்னையே முத்துமகாமாரியென் தாயே

தஞ்சமென வேயுனையடைந்த வடியார்க்க
தாமதஞ்செய்யாது வந்தருள் சுரக்க
செஞ்லம் யோசை கலீர் கலீரெனத்
திருவடிகளால் நடந்தே வந்து நீயும்
அஞ்ச வேண்டாம் மக்கக்காலமும் நீர்
அச்சமில்லாமலே வாழ்வீர்களே என்று
கொஞ்சுமொழி கூறியே மாங்கணாய் தன்னில்
குலவிஜூறு முத்துமகாமரியென் தாயே

வாதமுதலான பிண தீர்க்கும் என் தாயே
வல்லசுரர் தங்களை வதைக்க வந்தாயே
வேதனை செய் பில்லி சூனியமெல்லாமிப்போ
விலகவருள் செய்தெனைக் காத்தருளுதற்கு
தேமினி யிலுன்றனைப் போற் தெய்வமில்லை
வேதாந்த சக்தியாய் நின்றொழி விளங்க
தீதில் புகழ் மாங்கணாய் தனில் வீற்றிருக்கும்
வல்ல புகழ் முத்துமகமாரியென் தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சியின் வடிவமாய் வந்தவளும் நீயே
பிரியமுறு காளியாய் வந்தவளும் நீயே
ஆச்சி காமாட்சியாய் வந்தவளும் நீயே
ஐயை சாமுண்டியாய் வந்தவளும் நீயே
பேச்சுலவுவாலையாய் வந்தவளும் நீயே
புகளுறு வராகியாய் வந்தவளும் நீயே
வாச்சதென மாங்கணாய் தனில்வீற்றிருக்கும்
வல்ல புகழ் முத்துமாரியென் தாயே

அஞ்சாத ராட்சதர்கள் தங்களை வதைத்தாய்
அன்புடைய மக்களை காத்து ரட்சித்தாய்
பஞ்சாயுத தன் தங்கையாகவே வந்தாய்
பத்மாசனத்தி மைத்துனியாயிருந்தாய்
துஞ்சாத வைரவன் தன்னை நீ தந்தாய்
சொல்லரிய காடுகளெல்லாம் பெயர் புனை
விஞ்சாத மாங்கணாய் தன்னில் வீற்றிருக்கும்
விமலையே முத்துமக மாரியென் தாயே

பிஞ்சுமதி நுதலினாயுன்னை யென்னாளும்
பிரியாது மனமதில் நினைத்தவர்களுக்கு
வஞ்சகப் பில்லியே சூனியத்தொடு
வைசூரி மதலான கொடிய நோயெல்லாம்
பஞ்சினைப் போல் பறந்தேவிடும் தாயே
பத்மாசனத்திலே திருவருள் சுரந்து
அஞ்சேலென்றே கூறி மாங்கணாய் தன்னில்
அமர்வுற்ற முத்துமகமாரியென் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னு புகழ்சேர் திருகோணைநகர் தன்னில்
மாதுபிடியன்னமென நடையம்மையோடு
பின்னமல்லாமல வீற்றிருந்தருளும்
பெருமையுள கோணைநாயகனடிகள் வாழி
தன்னிகரில் சைவநெறியாளரும் வாழி
தகுதியுள்ள பசு செந்நெல் கன்னலும் வாழி
உன்னரிய மாங்கணாய்தன்னி வீற்றிருக்கும்
உயர் முத்து மாரியும் வாழ வாழியவே.

## மங்களம்

அரியுமறையும் பரையுமென்று மங்களமே
அரசர் செங்கோல் நிதம் தளைக்க மங்களமே
வரிசைபெறு தமிழ்மாலை பகர்வெனர் மங்களமே
வழர் செந்நெல் மழைபெய்து வாழ மங்களமே
குறைகள் இல்லாமலே பூசனைகள் புரிகின்ற
குலமோங்கு காந்தார் குழவழர் மங்களமே
பறவை சூழ் மாங்கணாய் நகர் பதியிலுறைகின்ற
பகர் முத்து மாரிபதமலரு மங்களமே

## மாரியம்மன் காவியம் முற்றிற்று

**இயற்றியவர்**
சிவஸ்ரீ. ஏ.வை.விஸ்வலிங்கக்குருக்கள்
பிரதம குரு சின்னத்தொடுவாய் விநாயகர் ஆலயம்
உப்புவெளி

**தொகுப்பு**
இரா.துரைநாயகம்
மாங்கணாய் மாரியம்மன் ஆலயம்
சாம்பல்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல்


அன்பினை நினைத்தல்
சொர்ணம் அக்கா
சாம்பல்தீவு கிராமத்தில், என்
சிறுபராய நாட்களில்
உணவும், தேநீரும் ,
கொள்ளாத அன்புமாய்
அள்ளித் தந்த இன்னொரு
தாய் இன்று காலமாகினார்
வெற்றுப் பாத்திரங்களில் நீர்
தன்னை நிறைப்பது போல
கடவுள் அவ்வப்போது
அனுப்புகின்ற மனிதர்கள்
தங்களை எங்களில்
நிரப்பி விடுகிறார்கள்–நீங்கள்
50சதத்துக்கு அளித்த
சுவையான இடியப்பத்திலும்
தகரக் குவளையில் கையில்
உல்லுப்பான் சீனியுடன் நக்கி
குடித்த தேத்தண்ணியிலும்
நீங்களே நிறைந்திருந்தீர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அன்பும் , பேச்சும்
அதன் உயிராக இருந்தது
சாம்பல்தீவு கிராமத்தின்
வரலாறு நீங்கள் – உங்களை
எங்களில் நிரப்பியே
செல்கிறீர்கள், அதன்
நினைவுகளில் என்றும்
வாழ்வீர்கள்!!! நீங்கள்
அடிக்கடி கூறுவது போல
"மலைக்கு (திருமலை)
போயிற்று வாறன்
என்பதாகவே நினைத்து
கொள்கிறேன்!!!

செல்வேந்திரன்
நகுலேந்திரன்
(யாழ்ப்பாணம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

01. உலகில் முதன் முதலில் பெண் பிரதமர் வந்த நாடு யாது ?
இலங்கை (Srilanka)

02. சீனி உற்பத்தி செய்யப்படும் நாடு யாது ?
பிரேசில் (Brazil)

03. இலங்கைக்கு அடுத்ததாக பௌத்தசமயத்தை அதிகம் பின்னற்றும் நாடு எது ?
தாய்லாந்து (Thailand)

04. மலர்கள் அதிகம் காணப்படும் நாடு எது?
நெதர்லாந்து (Nethalands)

05. உலகக் கிண்ண காற்பந்தாட்ட விளையாட்டு இறுதியாக எந்த நாட்டில் நடைபெற்றது?
கட்டார் (Qatar)

06. உலகில் மிகச் சிறிய தேசிய கீதத்தை கொண்டுள்ள நாடு எது ?
ஜப்பான் (Japan)

07. ஒலிம்பிக் விளையாட்டை உலகிற்கு அறிமுகப்படுத்திய நாடு ?
கிறீஸ் (Greck)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

"எந்நன்றி கொண்டாரக்கு உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

**அன்பு அன்னை அமரர் திருமதி சொர்னநாயகி
இராசேந்திரம் அவரகள் எம்மைவிட்டுப்
பிரிந்து சிவனடி சேர்ந்தார் எனும்
செய்தி கேட்டு ஓடி வந்து துயர்
பகிர்ந்த அன்பு நெஞ்சங்களக்கும், தொலைபேசி
மூலம் ஆறுதல் சொன்னவர்களுக்கும்,
இறுதிகிரியைகளையும் சிறப்பாக நடாத்த
தோளோடு தோள் நின்றவர்களுக்கும்,
அன்பு உள்ளவர்களுக்கும் மலர் வளையம்,
பதாதைகள், பிரசுரங்கள் வைத்து அஞ்சலி
செலுத்தியவர்களும், அன்பு உள்ளங்களுக்கும்
மேலும் பல வழிகளில் உதவிய உற்றார் உறவினர்,
அயலவர், நண்பர்கள் மேலும் இந்நூலை
அழகுற அமைத்த அச்சகத்தினருக்கும் எமது
நெஞ்சார்ந்த நன்றியை
தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**நன்றி**

குடும்பத்தினர்
86 3ம் வட்டாரம் ,
மாங்கனாய் அடுக்குபார் வீதி ,
சாம்பல்தீவு திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விரு

## இராசலிங்கம் + சௌந்தரநாயகி

- (அமரர்) இலட்சுமிப்பிள்ளை
- (சொர்ணநாயகி)
- புனிதராசா
- (அமரர்) துரைநாயகம்
- செல்வநாயகம்
- (அமரர்)வசந்தாதேவி
- இராசநாயகம்
- ஞானம்
- பேரின்பநாயகம்
- கனகநாயகம்
- அமிர்தநாயகம்
- சிவயோகநாயகம்
- ஜெயகௌரி

## சொர்ணநாயகி + இ

- கஜேந்திரன் (அமரர்)
- மகேஸ்வரன் + பூங்கிளி
  - லக்ஷிகா + நிரோஜன்
  - தினுஜன்
- நகு
  இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...ிருட்சம்

பொன்னம்பலம் + மாணிக்கம்

→ அமரர். இராசதுறை
→ (இராசேந்திரம்)
→ செல்வநாச்சியார்
→ இராஜேஸ்வரி

## இராசேந்திரம்

நகுலேஸ்வரன் + இராஜேஸ்வரி
→ மலுக்ஷிகா + விக்னேஸ்வரன்
→ விதேஷ்
→ விதுஷனா + கிருஷாந்தன்
→ வினுசிதா + வினுசன்

சத்தியபிரியா + சந்திரகுமார்
→ துஷாகினி
→ மஹதேஷ்
→ மஹிஷாகினி

ஜெகதீஸ்வரன் + விஜயதர்ஷிகா
→ எய்டன் விவான்
→ லியம் கார்த்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

–பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org